ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2148/23 - 2019 නොවැම්බර් මස 06 වැනි බදාදා - 2019.11.06

2148/23 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 5/2005

**2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த சபை (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்**

**8(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த சபை (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அதுகோரள ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட பிரிவின் நோக்கத்துக்காக, அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ எழுகின்ற, அட்டவணையின் நிரல் I இல் தரப்பட்ட பிணக்குகளின் வகுதிகளைச் சேர்ந்த பிணக்கொன்றின் விடயப் பொருளினது பணவகையான பெறுமதியானது, அதன் நிரல் III இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொகையாக இருத்தல் வேண்டுமென இக்கட்டளைமூலம் குறித்துரைக்கின்றேன்.

தலதா அதுகோரள,
நீதி மற்றும் சிறைச்சாலைகள்
மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2019, ஒற்றோபர் 29.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I<br>பிணக்கின் வகுதி | நிரல் II<br>விசேட மத்தியஸ்த சபைகள் இடப்பரப்பு | நிரல் III<br>எந்தப் பணவகையான பெறுமதியின்கீழ் மத்தியஸ்தம் கட்டாயமாக்கப்படுகின்றதோ அந்தப் பணவகையான பெறுமதி |
|---|---|---|
| புலம்பெயர் தொழிலாளர்களினதும் இலங்கையில் வதிகின்ற அவர்களின் குடும்பங்களினதும் இன்னல்களுடன் தொடர்புடைய ஏதேனும் பிணக்கு | குருநாகல் நிருவாக மாவட்டம் | ஒரு மில்லியன் ரூபா |

11 - 1328